# நாம் நகரத்தார்

சமூக இணையதள மின்னிதழ்

இலவச வெளியீடு

மலர் : 1　இதழ் : 9　ஆகஸ்ட் - 2022



## நற்சாந்துபட்டி
## ஸ்ரீ அடைக்கம்மை அப்பத்தாள்
## 25 வது வெள்ளி விழா படைப்பு சிறப்பிதழ்

# நல்லவை சொல்லும் நகரத்தார் படைப்புகள் 1

– இராம.சொக்கலிங்கம், நற்சாந்துபட்டி



தெய்வீக காரியங்களில் நகரத்தார்களின் பங்கு அளவிட முடியாது. தங்கள் சொந்த ஊரில் நடைபெறும் கோவில் காரியம் மற்றும் வெளியூர்களில் (உள்நாடு மற்றும் வெளிநாடு) இருக்கும் கோவில்களின் நித்ய பூஜை வழிபாடு, கும்பாபிசேக நிகழ்ச்சிகள் இதற்கு உதாரணம்.

நகரத்தார் குலத்தில் படைப்புகள் என்பது ஒரு வழிபாட்டு முறையாகும். வாழும் காலத்திலேயே உறவுகளை உதாசீனப்படுத்தி விடும் காலம் இது. எதிர்காலத்தில் இப்படியெல்லாம் வரும் என்று நினைத்துத்தானோ என்னவோ ஆறேழு தலைமுறைக்கு முன்பே, ஆண்டுக்கு ஒருமுறை முன்னோர்களுக்கு படையலிட்டு வணங்கும் வழக்கத்தை வைத்திருக்கிறார்கள் நகரத்தார்கள். இதற்காக உருவானது தான் படைப்பு மற்றும் படைப்பு வீடு.

நகரத்தார் சமூகத்தில் எவ்வளவு பெரிய செல்வந்தராக இருந்தாலும் பிள்ளைக்கு திருமணமானால் 'வேறு வைத்து' (தனிக் குடித்தனம்) விடுவார்கள். இந்த வழக்கத்தால் செட்டிநாட்டின் மாளிகை வீடுகளில் ஒரு வீட்டுக்குள்ளேயே பல குடித்தனங்கள் இருப்பதை இன்றைக்கும் பார்க்கமுடியும்.

இந்த வழக்கத்தால் செட்டிநாட்டின் மாளிகை வீடுகளில் ஒரு வீட்டுக்குள்ளேயே பல குடித்தனங்கள் இருப்பதை இன்றைக்கும் பார்க்கமுடியும். வேலை, வணிகம் நிமித்தமாக வெளியூர்களில் வசிப்பவர்கள், பிறந்த வீட்டி தங்களுக்கான பங்குப் பகுதியை பூட்டி வைத்திருப்பார்கள். நல்ல நாள் பெரிய நாளுக்கு மட்டும் சொந்த ஊருக்கு வந்து போவார்கள்.

எந்த ஊரில் இருந்தாலும், வாழ்ந்து செழித்த முன்னோர்களை வருங்கால சந்ததிகள் மறந்துவிடக் கூடாது என்பதற்காகவே நகரத்தார்களிடையே ஆண்டுக்கு ஒருமுறை இப்படைப்பு குடும்ப அளவிலும், குடி அளவிலும், பங்காளிகள் அளவிலும், ஊர் அளவிலும் கொண்டாடப்படுதல் உண்டு.

படைப்பு என்றால் ஒரு குடும்பத்தின் அத்தனை கிளைகளும், பங்காளிகளும் எந்த தேசத்தில் இருந்தாலும் தவறாமல் வந்து விடுவார்கள். சுய விருப்பு, வெறுப்புகளை அறவே களைந்து சமூக நலத்திற்காக நடைபெறும் கூட்டு வழிபாட்டின் பிரதிபலிப்புதான் இந்த படைப்பு. பல்வேறு ஊர்களில் இருந்து வரும் பங்காளிகள் அனைவரும் ஒன்று கூடி நடத்தும் படைப்பு நகரத்தார்களின் ஒற்றுமையின் வெளிப்பாடு. வருடம் ஒருமுறை நடைபெறும் இந்நிகழ்ச்சி பல்வேறு ஊர்களில் இருந்து வரும் நகரத்தார்களுக்கு சமூகத்தின் பிணைப்புப் பாலமாக திகழ்கிறது என்றால் அது மிகையாகாது.

இவ்வழிபாட்டுமுறை பெரும்பாலும் எதிர்பாராமல் நடந்த நிகழ்வுகள் காரணமாக உயிர் நீத்த சுமங்கலிப் பெண்களின் நினைவாகக் கொண்டாடப்படுவதாகும். இப்படைப்பு குடும்ப அளவிலும், குடி அளவிலும், பங்காளிகள் அளவிலும், ஊர் அளவிலும் கொண்டாடப்படுதல் உண்டு. சில ஆண் தெய்வங்களுக்கும் படைப்புகள் நிகழ்ந்து வருகின்றன.

இப்படைப்புகள் நடைபெற வீடுகள் உள்ளன. இவற்றைப் படைப்பு வீடுகள் என்பர்.

பொதுவாக படைக்கும் படைப்பு தவிர தனிப்பட்ட முறையில் திருமணம் மற்றும் வீட்டின் சுப நிகழ்வுகள் கருதிப் படைக்கும் படைப்புகளும் உண்டு. இப்படைப்பு வீடுகளில் ஏலம் போடுதல் என்பது நடைமுறையில் உள்ளது. இந்த ஏலத்தில் எடுக்கப்படும் பொருள்கள் மங்கலம் அருளும் என்ற நம்பிக்கை நடைமுறை இன்றும் தொடர்கிறது.



நமது நகரத்தார் பண்பாட்டிற்கு பெருமை சேர்க்கும் நமது படைப்பு முறைகளைப் பற்றி நாமும், இன்றைய வளரும் தலைமுறையினரும் அறிந்து கொள்வது அவசியம். இம்முனைப்பில் நாம் நகரத்தார் மின்னிதழ் தனது பங்களிப்பாக காலாண்டிற்கு ஒருமுறை 'நல்லவை சொல்லும் நகரத்தார் படைப்புகள்' எனும் இக்கட்டுரை தொடர் வாயிலாக நம் 76 ஊர்களில் நடைபெறும் படைப்புகள் குறித்து வெளியிட உள்ளது என மகிழ்வுடன் தெரிவிக்கிறோம்.

இத்தொடர் கட்டுரை நற்சாந்துபட்டியில் 10 ஊர் இலுப்பைக்குடி பங்காளிகள் படைக்கும் "ஸ்ரீ அடைக்கம்மை அப்பத்தாள்" படைப்பிலிருந்து தொடங்குகிறது.

இவ்வருடம் அடைக்கம்மை அப்பத்தாள் படைப்பு வெள்ளிவிழாவினை காணுகிறது (25வது வெள்ளிவிழா படைப்பு). இதனை ஒட்டி நமது இதழ் அடைக்கம்மை அப்பத்தாள் படைப்பு சிறப்பிதழாக மலருகிறது.





## அடைக்கம்மை அப்பத்தாள் வரலாறு

அடைக்கம்மை அப்பத்தாள் நாட்டுக்கோட்டை நகரத்தார் குலத்தில் உதித்த குலக்கொழுந்து பெண்ணிற்கு பெருமை சேர்த்த உத்தமி. தெய்வத்துக்கு ஒப்பாக மதிக்க வேண்டியவள் அடைக்கம்மை அப்பத்தாள். அவள் புரிந்த அதிசயங்கள், அற்புதங்கள் அநேகம்.

சுமார் 400 ஆண்டுகட்கு முன்னர், நாட்டுகோட்டை நகரத்தார்களின் 96 ஊர்களில் ஒன்றான பொன்னமராவதிக்கு அருகில் உள்ள துவார் என்ற குக்கிராமத்தில் நகரத்தார் சமூகத்தில் வயிரவன் கோவில் பெரிய வகுப்பில் பெண் மகவாகத் தோன்றினாள்.

அவளின் உடன்பிறப்பு இரு அண்ணன்மார்கள். இவளே இளையவள் சீரும் சிறப்பாக துவாரில் வளர்க்கப்பட்டு நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமாக வளர்ந்து. பருவ வயது அடைந்ததும், காலச்சக்கரத்தின் சுழற்சிப்படி நற்சாந்துபட்டி நகரத்தார் சமூகத்தில் இலுப்பக்குடி கோவில் சூடாமணிபுரமுடையோர் குடும்பத்தில் வாழ்க்கைப்பட்டு வந்து தன் கணவருடன் நற்சாந்துபட்டியில் குடும்பம் நடத்தி வந்தாள்.

காலச்சக்கரம் சுழன்று ஒடிக்கொண்டு இருந்தது. அடைக்கம்மை ஆச்சிக்கு இரண்டு வருட இடைவெளி வைத்து 3 மகன்கள் பிறந்தனர், அவர்கள் கணவர் சரியான வாழ்க்கை அமையாததால் ஊரில் இருந்து வரும் காலத்தில் பொழுதுபோக்காக சோமபானம் அருந்துவது,

சொகுசாக இருப்பது போன்ற செயல்களில் ஈடுபட்டதால் குடும்பத்தில் ஈடுபாடு இல்லாமல் இருவரும் வாழ்ந்து வாழ்க்கையை நடத்தி வரும் காலத்தில் தாய் தன் வீடான துவாருக்கு குழந்தைகளுடன் செல்வதும். பின் நற்சாந்துபட்டி வருவதுமாக இருந்தார்கள். அண்ணி இருவரும் கொஞ்சம் கடுமையானவர்கள்.

இப்படி தன் தாயார் வீட்டுக்கு வருவதும் போவதுமாக இருந்த காலத்தில் ஒரு முறை வீட்டுக்கு குழந்தைகளுடன் துவார் சென்றாள். அங்கு தாய் வீடு, தன் குடும்பத்தை விட செல்வச் செழிப்புடன் இருந்தது.

இம்முறை தாய்வீடு சென்றபோது அண்ணன் இருவரும் ஊரில் இல்லை. வாசலில் எள் காயப்போட்டு இருந்தது. இவள் தாய் வீடு சென்றதும் வாசலில் காயப்போட்ட எள்ளை காலால் பிள்ளைகள் சிதறி வீட்டனர். அதைக்கண்ட அண்ணி ஒருவர் "அடைக்கி வந்துவிட்டாள் ? இனி இப்படிதான் நடக்கும்! என சத்தம் போட்டு கூறி இருக்கிறார்.

இது காதில் விழுந்ததும் அடைக்கம்மை ஆச்சி மனச்சங்கடம் ஏற்பட்டு, குழந்தைகளை கூட்டிக்கொண்டு கோபத்துடன் தன் தாய் வீட்டுக்கு அடுத்துள்ள கண்மாயைத்தாண்டி துவார் கருப்பர் வள்ளீலிங்க அய்யனார் கோவிலுக்கு, கோபத்துடன் வந்து மனக் கோபம் காரணமாகவும் தன் கணவர் அரவணைப்பு இல்லாததாலும், தவிர பொறுப்பற்ற நிலையில் இருப்பதாலும் தான் வந்த போது அண்ணன் இல்லாததால் அண்ணியர் கடுமையாக சில சொற்கள் சொன்னதாலும் கோபம் காரணமாக கோவிலுக்கு அருகில் இருந்த அரளிச் செடியில் இருந்த அரளிக்காயை பறித்து அரைத்து குடிக்க தயார் ஆகி கொண்டு இருக்கும் நிலையில் பெரிய மகன் (சுமார் 7 வயது இருக்கும்) சூழ்நிலையைப் புரிந்து கொண்டு,



அந்த கோவில் வழியாக சென்ற இரட்டை மாட்டு வண்டியில் ஏறிக்கொண்டு நெய்கோணம் சென்று விட்டான்.

அரைத்த அரளி விதையை, தண்ணீரில் கரைத்து அடைக்கம்மை தானும் குடித்து தன் கையில் இருந்த குழந்தைகளுக்கு கொடுத்து வாழ்க்கையை முடித்துக் கொண்டு இயற்கை எய்தி விட்டனர்.

இவ்வாறாக வாழ்க்கை சோகத்தில் முடிந்தது. இவர்களில் தப்பிச் சென்ற மூத்த பையன், தன் உறவினர்கள் இருந்த ஊரான நெய்கோணம் சென்றான். இந்த நெய்கோணம் பழைய நெய்கோணம் என்று ராங்கியம் விரையாச்சிலைக்கு இடையில் உள்ளது.

காலம் நகர்ந்து துவாரில் மறைந்த இடமான துவார் வள்ளிலிங்கம் மதில் சுவர் அருகில் "அடைக்கம்மை" என அவர்கள் அண்ணன்மார் அல்லது அண்ணன் குடும்பத்தார் வந்து கூப்பிட்டால் மட்டும் "ஊம்" என்ற பதில் சத்தம் வருமாம். மற்றவர்கள் கூப்பிட்டால் பதில் வராமல் இருந்தது.



நற்சாந்துபட்டியில் காலப்போக்கில் அடைக்கம்மை ஆச்சியின் கணவரும் காலம் ஆகிவிட்டார். அதன் பின்னர் நற்சாந்துப்பட்டியில் இலுப்பக்குடி நகரத்தார் குடும்பங்களில் இடையூறுகள், செழிப்பின்மை என்ற பல குறைகள் ஏற்பட்டன.

எங்கு சென்று கேட்பினும் சுமங்கலிப் பெண் அடைக்கம்மை தன் கைகுழந்தையுடன் மரணம் அடைந்ததால். அவரை நினைவு கூர்ந்து அவளுக்கு பிரியமானவற்றை படைத்தால் எல்லாம் சரியாகி விடும் என ஆரூடம் பார்ப்பவர்கள்,

நிமித்தம்சொல்பவர்கள், கோடாங்கி அடித்து குறி சொல்பவர்கள் அனைவரும் ஒரே மாதிரியாக கூறியதன் காரணமாக படைப்பது எனவும் அவள் வாழ்க்கைப்பட்ட ஊரான நற்சாந்துப்பட்டியில் இலுப்பக்குடியார்கள் கூடி படைப்பது என முடிவு செய்து படைத்தால். தீப ஆராதனை காட்டி பூசாரித்தனம் யார் செய்ய வேண்டும் என சிந்தித்த போது பழைய நெய்கோணம் சென்று வாழ்ந்த மூத்த பையனே இவர்களுக்கு பூசாரி என முடிவு செய்து அவரை பூசாரியாக்கி படைத்து தீப ஆராதனை செய்து வழிபட்டு வருகின்றனர். அந்த பூசாரி குடும்பத்தார் இப்பொழுது உள்ள பூசாரி குடும்பத்தின் மூதாதையார் ஆவார்கள்.

கர்ண பரம்பரைக் கதையை வைத்தும், செவிழி செய்திகளை வைத்தும் ஏதோ ஒரு நெருக்கமான உறவு உள்ளவர்கள்தான் பூசாரித்தனம் செய்ய முடியும் என்ற காரணங்களைக்கொண்டும் இந்தமுடிவுக்கு வந்தார்கள். எனவே இவர்கள் தான் பூசாரி பட்டத்திற்கு உரியவர்கள் ஆனார்கள். இந்த 10 ஊர் இலுப்பக்குடி நகரத்தாரும், அதாவது நற்சாந்துபட்டி. விரையாச்சிலை, வி.லெட்சுமிபுரம் என்ற நெய்கோணம். நேமத்தான்பட்டி, கடியாபட்டி என்ற ராமசந்திரபுரம், வேந்தன்பட்டி. புதுப்பட்டி, குருவிக்கொண்டான்பட்டி, பனையப்பட்டி, பள்ளத்தூர் ஆகிய இந்த ஊரர்கள் ஒரு காலத்தில் ஒன்றாக இருந்தனர்.



காலநிலை காரணமாக பல ஊர்களில் பிரிந்து வாழ்ந்த ஒரே ஐயாக்கள் குடும்பந்தான் இந்த 10 ஊர் இலுப்பக்குடி பங்காளிகளாகும். இப்போது பூசாரி வீட்டார் உள்ள வி.லெட்சுமிபுரம், பழைய நெய்கோணத்தில் இருந்து அனைவரும் தங்கள் போக்குவரத்து நலன் கருதி இங்கு வந்தார்கள். ஒரே ஐயாக்கள் வீடு என்பதற்கான காரணம் பனையப்பட்டியார் ஆரம்பத்தில் நற்சாந்துப்பட்டியில் இருந்து தன் நலன் கருதி பனையப்பட்டி சென்று நிலையாக இருந்தனர்.

இவர்களுக்கு ஆதி ஊர் நற்சாந்துப்பட்டி இவர்கள் ஐயாக்கள் வீடு நற்சாந்துப்பட்டியில் உள்ளது. இதே மாதிரி குருவிகொண்டான்பட்டி சென்றவர்களும் இங்கு இருந்து வாழப்போனவர்கள் என்பதற்கான ஆதாரம் உள்ளது. எனவே இந்த 10 ஊர் இலுப்பக்குடியாரும் ஒரே குடும்பம் பல ஐயாக்கள் வீடு என்பதும் உறுதி ஆகின்றது.

வெகுநாள் இடைவெளிக்குப் பிறகு 1963–ல் இருந்து தான் இப்படைப்பு மீண்டும் தொடங்கியது. 2018 ஆகஸ்டு 3 வரை 24 படைப்பு முடிந்து உள்ளது. 2 வருடத்துக்கு ஒரு படைப்பு என ஆடி மாதங்களில் படைத்து வந்துள்ளனர். இப்பொழுது படைப்பது 25–வது படைப்பு ஆகும்.

அடைக்கம்மை அப்பத்தாளை மனதில் எண்ணி, கடவுளை வணங்கி புறப்பட்டு சென்றால் எக்காரியமும் நிறைவேறும். படைப்பு நிகழ்வில் எக்காரியம் நினைத்து ஏலம் எடுத்தாலும் அக்காரியம் நல்லமுறையில் நடைபெறும் . இது அடைக்கம்மை அப்பத்தாளின் மகிமை. எல்லாம் அவள் கருணை என இருகரம் கூப்பி வணங்கி, அனைவரும் அப்பத்தாள் அருளினைப் பெற்று வாழ்வில் உயர்நிலை அடைவோமாக..!

நல்லவை தருவாள், நலம் தருவாள்,
நல் மக்களோடு செல்வம் தருவாள்,
எங்கள் அடைக்கம்மை அப்பத்தாள் போற்றி ! போற்றி !

## அடைக்கம்மை அப்பத்தாள் படைப்பு நடைமுறையும், விபரங்களும் :



நற்சாந்துப்பட்டி அடைக்கம்மை அப்பத்தாள் படைப்பு வீடு கடைவீதி பஸ் நிலையம் அருகில் உள்ளது. பழமையாக இருந்த படைப்பு வீடு 2016 ஆம் ஆண்டு புதுப்பொலிவுடன் புதிய படைப்பு வீடு பங்காளிகளால் கட்டப்பட்டது

ஒவ்வொரு முறையும் ஆடி மாதம் படைப்பு நடைபெறும். அதற்கு ஒரு தனி நாள் பார்ப்பதற்கும் படைப்பு வைப்பதற்கும் 10 ஊர் பங்காளிகள் கூடுவதற்கும் பூசாரி செட்டியார் அவர்களே சித்திரை மாத கடைசியில் திருமுகம் எழுதி 10 ஊருக்கும் அனுப்புவார்கள். அந்த குறிப்பிட்ட தேதியில் அனைவரும் கூடுவார்கள்.



தற்போது படைப்பு பூசாரியாக வி.லெட்சுமிபுரம் இலுப்பைக்குடியை சேர்ந்த ப.செ.அ.சே.சொக்கலிங்கம் செட்டியார் அவர்கள் படைப்பை மேற்கொண்டு வருகிறார்கள்

பூசாரி குறிப்பிட்ட நாளில் 10 ஊர் பங்காளிகள் கூடிய உடன் படைப்பு வெள்ளிக்கிழமை அதுவும் மிகவும் சுத்தமாக வளர்பிறையாக பார்த்து நாள் குறிப்பார்கள்.
படைப்பு வைத்த வெள்ளிக்கிழமைக்கு முந்தைய வெள்ளிகிழமையோ. திங்கட்கிழமையோ நாள் மிகவும் சுத்தமாக இருக்கமாறு பார்த்துக் கொள்வார்கள் . அந்த நாளில் துவார் சென்று அப்பத்தாளை வணங்கி வந்து பின்னர்படைப்பு முடிந்த மறு வெள்ளிக்கிமை அஷ்டமி இல்லாமல் பார்த்து இளம் படைப்பு படைப்பார்கள்



படைப்புக்கு நற்சாந்துபட்டி இலுப்பைக்குடி, பங்காளிகள் 6 பேரை நியமித்து அதில் ஒருவரை தலைவராக நியமித்து படைப்பு வேலைகள் அனைத்தும் ஏற்பாடு செய்யபெறும்.

இந்த கமிட்டியே சகல ஏற்பாடுகளும் செய்து படைப்பதற்கு தயார் செய்து வைப்பார்கள். மற்றும் 9 ஊர் பங்காளிகளும் அவரவர் ஊர்களுக்குரிய பொறுப்புகளை ஏற்றுக்கொண்டு நிர்வாக குழுவோடு கலந்து செயல்படுவார்கள்.

ஆலய பூசை தேதியும், படைப்பு தேதியும் குறித்து அழைப்பிதழ் எல்லா பங்காளிகளுக்கும் அனுப்பி வைக்கப்படும்

தொடக்கமாக நல்ல நாள் பார்த்து முகூர்த்த கால் ஊன்றிய பின்பு இலுப்பக்குடி சென்றுபாக்கு வைப்பார்கள்.

பின்பு நற்சாந்துபட்டி நகர சிவன்கோவிலில் பாக்கு வைப்பார்கள்.அதன் பின்பு துவார் ஆலய பூசைக்கு 10 ஊர் பங்காளிகளும் மாலை 4 மணிக்கு துவார் வந்து சேர்ந்து விடுவார்கள்.



அன்று இரவு கோவிலுக்கு பூசை செய்யும் வேளாளர்களைக் கொண்டு 3 கிடாய் வெட்டு நடத்தி பொங்கல் வைத்து அதை அவர்கள் தேவைக்கு வைத்து கொள்வார்கள். அனைவரும் பிள்ளையார், வள்ளிலிங்கம், பூரணி. புஷ்கலாதேவி முத்துக்கருப்பன், சுப்ரமணியர். வைரவர், அடைக்கம்மை அப்பத்தாள் உருவசிலைக்கட்கு அபிஷேக ஆராதனை செய்த பின்னர் அனைத்து தெய்வங்களுக்கும் அர்ச்சனை செய்து சர்க்கரை பொங்கலிட்டு பின்னர் பாற்சோறு பிரசாதம் கொடுத்து அனைவரும் படைப்பு நல்ல விதமாக நடைபெற வேண்டும் என வணங்கி இரவு 3 மணிக்கு எல்லோரும் ஊர் வந்து சேருவார்கள்

படைப்பதற்கு 2 நாள் முன்பு ஒரு நல்ல நாளில் அரிசி அளப்பது துவக்கமாகி நற்சாந்துபட்டியில் முதல் மரியாதைக்குரிய அம்பலக்கார செட்டியார் குடும்பத்தில் மூத்த வாரிசு அரிசியை அளந்து அதை தொடர்ந்து மீதம் இருக்கும் அம்பலக்கார செட்டியார் வீட்டு அரிசி அனைத்தும் மற்றும் பங்காளி கொண்டு வந்த அரிசியை அம்பலக்கார செட்டியார் வீட்டு ஆண்களே அளக்க வேண்டியது.

படைப்பு சமையலுக்காக புள்ளி வாரியாக புழுங்கல் அரிசி, பச்சரிசி, துவரம் பருப்பு கொடுப்பார்கள்.

படைப்புக்கு முதல் நாள், நற்சாந்துப்பட்டி சின்ன ஊரணி பிள்ளையார், சிவன் கோவில் சிதம்பரேஸ்வரர், சிவகாமி அம்பாள்.

மலைக்கோவில் சுவாமி அம்பாள், முருகன், முனீஸ்வரர், கோட்டூர், ஸ்ரீ சுந்தரநாயகி அம்பாள், பேரையூர் ஸ்ரீ பொய்யாத விநாயக மூர்த்தி, சுவாமி அம்பாள். விரையாச்சிலை ஸ்ரீ அடைக்கலகாத்தால்லம்மன் ஆகிய தெய்வங்களுக்கு அர்ச்சனை செய்து வருவார்கள்.

பின்பு படைப்பு நாளான வெள்ளிக்கிழமை மாலை சின்ன ஊரணி பிள்ளையாருக்கு சந்தனக்காப்பு சாத்துவதற்கு ஏற்பாடு செய்யப்படும்.



அடைக்கம்மை அப்பத்தாள் படைப்பு நாளான வெள்ளிக்கிழமை அதிகாலை 4 மணிக்கு படைப்பு வீட்டில் பஞ்சாங்க அய்யாரை கொண்டு புண்ணியதானம் செய்து அதன் பின்பு அதிகாலை 5 மணிக்கு எல்லாம் ஊற வைத்த பச்சரியை உரலில் போட்டு படைப்பு வீட்டு வாசலில் முதலில் பூசாரி துவக்கி வைக்க சுமங்கலி ஆச்சி உலக்கையால் அரிசி இடிக்க ஆரம்பித்து. பின்பு அனைத்து மகளிரும் பச்சரிசியை இடித்துக்கொண்டே இருப்பார்கள்.



சரியாக படைப்பு வெள்ளிக்கிழமை அன்று இராகு காலத்துக்கு முன்னர் காலை 10 மணிக்கு எல்லாம் இடித்த பச்சரிசி மாவை சல்லடை கொண்டு சலித்து ஒரு மூட்டை பச்சரிசிக்கு 45 கிலோ வெல்லம் 5 கிலோ கருப்பட்டி சேர்த்து பாகு கிண்டி பாகை ஆற வைத்து பின்னர் அதில் பச்சை அரிசி மாவை கலந்து படைப்பு பணியாரம் முதலில் பூசாரி மனைவி ஊத்தி எடுத்தபின்பு மற்ற ஆச்சிமார்கள் ஊத்தி எடுக்கவேண்டியது ஒரு மூட்டைக்கு ஐந்து படி தண்ணீர் வைக்க வேண்டும்.

இப்படியாக இரவு 1 மணி வரை மாவு இடிப்பதும், மாவு கலப்பதும் பணியாரம் சுடும் வேலைகளும் நடந்து கொண்டே இருக்கும்.



மாலை 5 மணி அளவில் துவாரில் இருக்கும் வள்ளிலிங்கம் கோவில் கிணற்றில் இருந்து தீர்த்தம் எடுத்து வேளார் கொண்டு வந்து தருவார்கள்.



சரியாக இரவு 8 மணியளவில் நற்சாந்துப்பட்டி நல்ல தண்ணீர் பெரிய ஊரணிக்கு (விரையாச்சிலை செல்லும் வழியில் உள்ளது) படைப்பு பொங்கல் பானை 2 ம் விநாயகப்பானை 1–க்கும் பொங்கல் வைக்க தண்ணீர் எடுத்துவர பூசாரி செட்டியாரும், அப்பத்தாள் வீட்டு பண்டாரமும், 10 ஊர் பங்காளிகளும் மேளதாளத்துடன் ஆகாச அதிர்வேட்டு தோரணவானம். பூவானம் உட்பட சகல மரியாதயுடன் சென்று அங்கு பூசாரி செட்டியாரும் பண்டாரமும்,

ஸ்நானம் செய்து துவார் வேளாளரைக் கொண்டு விபூதி கொடுத்து மாலை அணிவித்து 2 சிறு குடங்களில் தண்ணீர் எடுத்து மேள தாளத்துடன் 10 ஊர் பங்காளிகளுடன் படைப்பு வீடு வந்து சேருவார்கள்.



பெரிய ஊரணியில் தண்ணீர் தூக்கி வந்ததும். இரவு 10 மணியளவில் படைக்கும் வாசலில் தரைக்கு முன் கோலம் போட்டு சர்க்கரைப்பொங்கல் வெள்ளைசாதம். விநாயகப் பானை ஆகிய மூன்றுபொங்கல் வைத்து பச்சை அரிசி கலந்து பால் ஊற்றி பொங்கல் வைப்பார்கள். பால் பொங்கியுடன் அரிசியை போட்டு பொங்கல் வைத்து இறக்குவார்கள்.

சரியாக இரவு 3 மணிக்கு எல்லாம் படைப்பு வீட்டுக்குள் உள்ள அடைக்கம்மை அப்பத்தாள் படத்துக்கு நன்றாக பூ போட்டு பழங்களும் வைத்து அலங்காரம் செய்யப்படும்.



படைப்பு அறையில் படத்திற்கு அலங்காரம் முடிந்ததும் (பகல் 2 மணிக்கு பூசாரி குடும்பத்தால் பெரிய ஊரணியில் போளையில் இருக்கிற துவைத்து துணிமணிகளை நன்கு பரப்பி அடுக்கிவைத்து படைப்பதற்கு உரிய சகல நகைகளையும், வேட்டி, சேலையும் பரப்பி வைத்து

3 இலையோடு வெள்ளைசாதம், சர்க்கரை சாதம், கருப்பட்டி பணியாரமும் படைத்து, அதன் இடப்பக்கத்தில் உள்ள முத்துக்கருப்பருக்கே என்று உள்ள சின்ன நாற்காலி அருகில் படையலில் கோழிக்கறி, முட்டை வைத்து படிப்பார்கள்.



எல்லாம் நடந்தபின் ஊருக்குள் பண்டாரம் நற்சாந்துப்பட்டி பங்காளி வீட்டுக்கு சொல்லிவிட்டு வந்ததும், முதலில் பூசாரி செட்டியார் சாம்பிராணியைக் காட்டி, அதை அடுத்து 7 அடுக்கு அலங்கார தீபம் காட்டி அதை அடுத்து ஒற்றை முகத்தில் தீபம் ஏற்றி அதை அடுத்து பூர்த்தியாக ஏழுமுக தீபம் ஏற்றி பூசாரி செட்டியார் தீப ஆராதனை காட்ட. வந்திருந்த அனைவரும் பூசாரியிடம் விபூதி குங்குமம் வாங்கியவுடன் படைப்பு சாப்பாடு காலை 4 மணிக்கு எல்லாரும் சாப்பிடுவார்கள்

படைப்பு வீட்டுக்கு எதிரில் அடைக்கம்மை அப்பத்தாள் முன்பாக பூசாரியார் உட்கார்ந்து நற்சாந்துப்பட்டி நகரத்தார் எடுத்துக் கொடுக்க எல்லோரும் எல்லா வளமும் பெற வேண்டிக்கொண்டு, நற்சாந்துப்பட்டி, விரையாச்சிலை, வி.லெட்சுமிப்புரம், நேமத்தான்பட்டி, வேந்தன்பட்டி, குருவிக்கொண்டான்பட்டி, புதுப்பட்டி, ராமசந்திரபுரம். பனையப்பட்டி, பள்ளத்தூர் ஆகிய ஊர்களைச் சேர்ந்த இலுப்பக்குடி நகரத்தார்கள் காளாஞ்சி வாங்கிச் செல்வார்கள்.

பின்னர் அன்று மாலை 6 மணிக்கு பூசாரி குடும்பத்தார் அனைவரும் சொல்லிகொண்டு அன்று இரவே தங்கள் ஊரான வி.லெட்சுமிபுரம் செல்வார்கள்.
ஒரு வாரம் சென்று பச்சரிசி பொங்கல் வைத்து இளம் படைப்பை பூர்த்தி செய்வார்கள்.

இவ்வாறாக ஸ்ரீ அடைக்கம்மை அப்பத்தாளின் படைப்பு நடந்தேறும்.

இந்தமாதம் ஸ்ரீ அடைக்கம்மை அப்பத்தாளின் 25வது வெள்ளி விழா படைப்பு ஆடி 27ம் தேதி (12.8.2022) அன்று நடைபெறுகிறது. தொடக்கமாக துவார் ஆலய பூசை ஆடி 23ம் தேதியும் ( 8.8.2022 ) நிறைவாக இளம்படைப்பு ஆவணி 6ம் தேதி (22.8.2022) அன்றும் 10 ஊர் இலுப்பைக்குடி பங்காளிகளால் முடிவு செய்யப்பட்டு இனிதே நடந்தேற உள்ளது.

நிறைவாக இக்கட்டுரையாக்கத்தில் தகவல்கள் அளித்து உறுதுணை செய்த நற்சாந்துபட்டி நா.பெரி.நாராயணன்(எ)சிவாஜி செட்டியார் அவர்களுக்கும், அடைக்கம்மை அப்பத்தாள் இணையதள நிர்வாகி சி.கார்த்திக்(எ)பெரியகருப்பன் அவர்களுக்கும் நாம் நகரத்தார் மின்னிதழ் சார்பாக நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

அடைக்கம்மை அப்பத்தாள் படைப்பு குறித்த மேலும் விவரங்களை www.adaikkammaiappathal.com என்ற இணையதள முகவரியில் பார்வையிடலாம்.

Adaikkammai Appathal.com
No.1 Nagarathar website for Padaippu veedu